மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.பி.இராமர்

ந.க.எண்: 3240/2018/தி3 நாள்:17.10 .2018.

பொருள் : மதுரை மாவட்டம் - மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் - மாத்தூர் ஊராட்சி - மாத்தூர் கிராமம் சர்வே எண்கள்:129/1. 2. 3A. 3B. 3C. 4. 5. 6. 7. 8. 9. 10. 130/4pt. 134/1B. 2-ல். 37837.82 ச.மீ. பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு வடிவமைப்பிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியது - உரிய கட்டணம் செலுத்த தெரிவித்தல் - சார்பு.

பார்வை :

1) அரசாணை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்:04.05.2017 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.125, பாகம்-III பிரிவு 1(a), நாள்:04.05.2017
2) அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017
3) உறுப்பினர் செயலர்(பொ), மதுரை உள்ளூர் திட்டக்குழுமம், மாநகராட்சி அலுவலக வளாகம், அண்ணாமாளிகை அவர்களின் ந.க.எண்.3695/2018/மதி-2 நாள்:26.09.2018
4) இவ்வலுவலக இதே எண்ணிட்ட நடவடிக்கைகள் நாள்: 16.10.2018
5) திரு.S.சரவண் குமார் மற்றும் S.நித்யா அவர்களின் கட்டணச்செலுத்துச்சீட்டு நாள்: 17.10.2018

-----------------

உத்தரவு:-

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாத்தூர் ஊராட்சி மாத்தூர் கிராமம் சர்வே எண்கள்:129/1. 2. 3A. 3B. 3C. 4. 5. 6, 7, 8, 9. 10. 130/4pt. 134/1B. 2-ல். 37837.82 ச.மீ. பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவு, பார்வை 1 மற்றும் 2ல் சுட்டிய அரசாணையின்படி நடவடிக்கை மேற்கொண்டு அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடம் முறைப்படுத்தி திருத்தியமைக்கப்பட்ட கொள்கையளவிலான மனைப்பிரிவு வரைபடத்திற்கு (in principally accepted layout frame) ம.வ./ம.உ.தி.கு எண்.382(R)/2018 என எண்ணிட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் திரு.S.சரவண் குமார் மற்றும் S.நித்யா என்பவருக்கு பார்வை 3-ல் காணும் கடிதம் மூலம் உள்ளூர் திட்டக்குழுமம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

வரன்முறைக் கட்டணமாக ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மேலும், வளர்ச்சிக் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் உள்ளாட்சியின் தனிக்கணக்கில் செலுத்தப்பட்ட பின்னரே, இம்மனைப்பிரிவில் அமையும் தனித்த மனைகளுக்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 3-ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

V Vidya

பார்வை 5-ல் காணும் கடிதத்தின் கீழ்க்காணும் விபரப்படி முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தப்பட்டதற்கான செலுத்துச்சீட்டு இணைத்து வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | கட்டண விபரம் / இடத்தின் மொத்த அளவு (ச.மீ) | ஒரு சதுர மீட்டருக்கு ரூ. | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | செலுத்தப்பட்ட தொகை ரூ. | தொகை செலுத்தப்பட்ட சலான் எண் மற்றும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | வரன்முறைக் கட்டணம் (unsold) 27318 ச.மீ. | 30/- | 819540.00 | 819540.00 | கருவூல செலுத்துச் சீட்டு எண்: 65/17.10.2018 |
| 2. | மேம்பாட்டுக் கட்டணம் (unsold) 27318 ச.மீ. | 25/- | 682950.00 | 682950.00 | ஊராட்சியில் வழங்கப்பட்ட பல்வகை வரவு ரசீது எண்: 23284/17.10.2018 |
| | மொத்தம் | | 1502490.00 | 1502490.00 | |

மேற்கண்டவாறு வரன்முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் மேம்பாட்டுக்கட்டணம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து கீழ்க்கண்ட விற்பனை செய்யப்படாத மனைப்பிரிவுகளுக்கு மட்டும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு (மனை எண்கள்: 1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13,14,15,16,17,18,19pt,20pt,21pt,22pt, 23pt,24pt,25,26,27,28,29,30,31,32,33,34,35,36,37,38,39,40,41,42 ,43,44,45,46,48,49,50,51,52,53,54,55,56,57,58,59,60,61,62,63,64, 65,66,67,68,69,70,71,72,73,74,75,76,77,78,79,80,81,82,83,84,85, 86,87,88,89,90,91,92,93,94,95,96,97,98,99,100,101,102,103,104, 105,106,107,108,109,110,111,112,113,114,115,116,117,118,119, 120,121,122,123,124,125,126,127,128,129,130,131,132pt,133pt, 134pt,135pt,136pt,137pt,138pt,139pt,140pt,141pt,142pt,143pt, 144,145,146,147148,149,150,151,152,153,154,155,156,OSR-1) | : | 30365.87 ச.மீ |
| பூங்கா மொத்த பரப்பளவு (மனை எண்: OSR-1) | : | 3048.59 ச.மீ |
| கட்டணம் செலுத்தப்பட்ட மொத்த பரப்பளவு | : | 27317.28 (அ) 27318 ச.மீ |

நிபந்தனைகள் :

1. இம்மனைப்பிரிவில் அமையும் பூங்காவினை உள்ளாட்சிக்கு தானமாக பதிவு செய்து 17.11.2018 -க்குள் இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் மேற்படி உத்தரவு இரத்து செய்யப்படும் என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.
3. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்கு முன்பு பெறப்பட்ட நில உரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம்

702

41

யார் செய்து கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும், அதன் மீது வேறு எவரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தின் முன் தீர்க்கப்படலாம், நில உரிமை குறித்து முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

4. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. இந்த வரன்முறை மனைகளுக்கு மட்டுமே பொருந்தும், மனையில் அமையும். கட்டிடத்திற்கு வரன்முறையாகக் கருதப்பட மாட்டாது.
6. உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளாட்சி அமைப்பு ஒப்புதலின்றி மாற்றம் செய்யக் கூடாது.
7. நகர் ஊரமைப்புத் துறை கொள்கை அளவிலான (In Principle) ஒப்புதல் அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை, அதன் மேல் வேறு யாரேனும் தனிநபர் உரிமை கோரினால் இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறையோ உள்ளாட்சி துறையோ பொருத்தமான அமைப்பு அல்ல.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)
மதுரை கிழக்கு.

17.10.18

பெறுநர் :

திரு.S.சரவண் குமார் மற்றும் S.நித்யா,
க.எண்:4/123, சாந்தி நகர், பரசுராம்பட்டி,
மூன்றுமாவடி, மதுரை வடக்கு,
கே.புதூர்,
மதுரை-625007.

நகல் : ஊராட்சி செயலாளர், மாத்தூர் ஊராட்சி.

L V Nidya